






We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## ஜூலை - 2019

We Are Here..!! To Guide You..!!







# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஜுலை - 24.07.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, “AK” Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விளையாட்டுச் செய்திகள்
- நியமனங்கள்
- முக்கிய தினம்










# தேசிய நிகழ்வுகள்

- **மெய்நிகர் நாணயங்கள் மீதான அமைச்சகங்களுக்கிடையே குழுவானது “மெய்நிகர் நாணயத்தின் தடை & அதிகாரப்பூர்வ டிஜிட்டல் நாணய ஒழுங்குமுறை மசோதா, 2019” என்பதுடன் சேர்த்து தனது அறிக்கையையும் சமர்ப்பித்துள்ளது.**
  - இது இந்தியாவின் மெய்நிகர் நாணயங்கள் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது அபராதம் விதிக்கவும் அவற்றை அதிகாரப் பூர்வமாகத் தடை செய்யவும் பரிந்துரைத்துள்ளது. ஆனால் இது “ அதிகாரப்பூர்வ டிஜிட்டல் நாணயத்தை வெளியிடுவதை” அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்று கூறியுள்ளது.

- **இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பாதுகாப்புக் கண்காட்சியின் 11வது பதிப்பானது 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் முதன்முறையாக உத்திரப் பிரதேசத்தின் தலைநகரான லக்னோவில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.**
  - இந்த நிகழ்வின் கருத்துரு, “இந்தியா – வளர்ந்து வரும் பாதுகாப்பு உற்பத்தி மையம்” என்பதாக இருக்கும். இது பாதுகாப்புத் துறையில் உள்ள டிஜிட்டல் உருமாற்றத்தின் மீது கவனத்தைச் செலுத்துகின்றது.

- **“இந்தியாவின் லேசான புல்லட் ப்ரூ.ஃ.ப் ஜாக்கெட்” என்று அழைக்கப்படும் பாபா கவாச் புதுதில்லியில் நடைபெற்ற சர்வதேச போலீஸ் எக்ஸ்போ 2019 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.**
  - புல்லட் ப்ரூ.ஃ.ப் ஜாக்கெட்டை ஆர்தனன்ஸ் தொழிற்சாலைகள் வாரியம் (OFB) மற்றும் உலோகக் கலவைகள் உற்பத்தியாளர் மிஸ்ரா தாது நிகம் (Mishra Dhatu Nigam – MIDHANI) ஆகியோர் உருவாக்கியுள்ளனர், இது ஹைதராபாத்தை தலைமையிடமாகக் கொண்டுள்ளது.

## சர்வதேச நிகழ்வுகள்

- **பிரிட்டிஷ் அரசியல்வாதியும், கன்சர்வேடிவ் கட்சியின் தலைவருமான போரிஸ் டி பி.்.பெல் ஜான்சன்,பிரிட்டனின் பிரதமரானார்.**
    - 2019 அக்டோபரின் இறுதிக்குள் பிரிட்டனை ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற்றுவதாக உறுதியளித்துள்ளார். ப்ரெக்ஸிட்டிலிருந்து வெளியேற தனது பிரெக்ஸிட் ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் அங்கீகாரத்தை பெறத் தவறியதால் தெரசா மே பதவி விலகினார்.

## விளையாட்டு நிகழ்வுகள்

**சர்வதேச கால்பந்து சம்மேளனம் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் FIFA உலகக் கோப்பை 2020 (10 வது பதிப்பு)- ஐ 10 ஆண்டுகளுக்குப் பிறகு நைஜீரியா நடத்தவுள்ளது.**

We Shine Academy™

## நியமனங்கள்

- **மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், பீகார், நாகலாந்து மற்றும் திரிபுரா ஆகிய 6 மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்களை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் நியமித்துள்ளார்.**
    - புதிய ஆளுநர்களின் பெயர்கள் பின்வருமாறு

| வ.எண் | மாநிலங்கள் | புதிய ஆளுநர்கள் |
|---|---|---|
| 1. | மத்தியப்பிரதேசம் | லால் ஜி தாண்டன் |
| 2. | உத்திரப்பிரதேசம் | ஆனந்தி பென் படேல் |
| 3. | பீகார் | பாகு சவுகான் |
| 4. | மேற்கு வங்காளம் | ஜெகதீப் தங்கர் |
| 5. | திரிபுரா | ரமேஷ் பைஸ் |
| 6. | நாகலாந்து | RN ரவி |

## முக்கிய தினம்

- **ஒவ்வொரு ஆண்டும் ஜீலை 23 அன்று இந்தியாவில் தேசிய ஒளிபரப்பு தினம் அனுசரிக்கப்படுகின்றது.**
- 1927 ஆம் ஆண்டு ஜீலை 23 அன்று நாட்டின் முதலாவது வானொலி ஒளிபரப்பு இந்திய ஒளிபரப்பு நிறுவனம் என்ற ஒரு தனியார் நிறுவனத்தினால் மும்பையிலிருந்து ஒளிபரப்பப்பட்டது.
- 1936 ஆம் ஆண்டு ஜீன் 08 அன்று இந்திய அரசு ஒளிபரப்புச் சேவையானது அனைத்து இந்திய வானொலியாக (All India Radio – AIR) மாறியது.
- AIR - ன் குறிக்கோள் “பகுஜன் ஹிட்டாயா பகுஜன் சுக்காயா” என்பதாகும்.

We Shine Academy™